டி.வி.சி எண்.3/2022 நாள்: 27.02.2024

ம.சா.1 பானுப்பிரியா

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை:</u>**

**1.** நான் நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள எனது முகவரி தவறு என்று சொன்னால் சரியல்ல. அது நான் வாடகைக்கு தற்போது குடியிருக்கும் வீட்டின் முகவரி. நான் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால மனுவில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டிலிருந்து வரும் அழைப்பாணையானது நான் நிருபண வாக்குமூலத்தில் கூறியிருக்கும் முகவரிக்கு சார்பு ஆகாமல் திருப்பப்பட்டுள்ளது என்றால் விவகாரத்து மனு மேற்படி முகவரிக்கு வந்தது.

2. நான் 1ம் எதிர்மனுதாரரை எவ்வளவு காலமாக பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் 2020ம் வருடத்தில் இருந்து வாழ்கிறேன். நான் இந்த மனுவை தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. நான் 1ம் எதிர்மனுதாரரை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் 2021ம் வருடம் பார்த்தேன். 2021ம் வருடம் 1ம் எதிர்மனுதாரரின் வீட்டில் வைத்து எனது பொருட்களை எடுத்துவரும்போது பார்த்தேன். 1ம் எதிர்மனுதாரர் என் மீது தேவகோட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து, அதன்பின்னர் தான் என் பொருட்களை அவர் வீட்டிலிருந்து எடுத்துச்சென்றேன் என்றால் சரிதான்.

3. நான் காவல்நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்று எழுதிக்கொடுத்து சென்றேன் என்றால் அவ்வாறு எழுதிக்கொடுக்கவில்லை. நான் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் 1ம் எதிர்மனுதாரரிடம் 40 பவுன் நகையை கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, கொடுத்துள்ளோம். நான் சீர்வரிசை நோட்டு என தாக்கல் செய்துள்ள ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சீர்வரிசை நோட்டில் எதிர்மனுதாரர்களின் கையெழுத்து மற்றும் எனது பெற்றோரின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான்.

4. 1ம் எதிர்மனுதாரர் எதிரி வழக்குரையில் நான் கார்த்திக் என்ற நபர் தவறாக இருப்பதாக கூறியுள்ளார் என்றும், அதை மறுத்து நான் பதிலுரை

தாக்கல் செய்துள்ளேனா என்றால் பதிலுரை தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரர் வெளிநாட்டில் ரூபாய்.1,40,000 சம்பாதிப்பதாக சொல்லியுள்ளேன் என்றும், அதை எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை, ஆனால் வாய்மொழியாக என்னிடம் சொல்லியுள்ளார். 1ம் எதிர்மனுதாரர் திருமணத்தின் போது மாதம் ரூபாய்.14,000 சம்பாதித்தார் என்பதால் தான் அவருடன் நான் வெளிநாட்டிற்கு சென்று குடும்பம் நடத்தவில்லை என்றால் சரியல்ல.

5. 1ம் எதிர் மனுதாரருக்கு வருமானம் ரூ.14,000 என்பது எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக பொய்யாக கூடுதல் வருமானம் பெறுவதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் திருமணத்திற்கு பின்னர் எனக்கு முதல் குழந்தை பிறந்த பின்னர் வெளிநாட்டில் அவருடன் சேர்ந்து இரண்டு மாதங்கள் வசித்தேன் என்றால் சரிதான். எனது உறவினர் சுப்பிரமணியன் மகன் கார்த்தி என்பவரின் மனைவி பெயர் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கார்த்தி என்பவரின் மனைவி பானுமதி என்பவர் என் வீட்டிற்கு வந்து என் வாழ்க்கையை ஏன் கெடுக்கிறாய் என்று சொன்னார் என்றால் இல்லை.

6. எனக்கும் கார்த்தி என்பவருக்கும் உள்ள உறவை ஊராட்சி மன்ற தலைவர் அங்குச்சாமி என்பவர் கண்டித்தார் என்றால் அவ்வாறு எதுவும் கண்டிக்கவில்லை, என்னையும் 1ம் எதிர்மனுதாரரையும் தான் கண்டித்தார். கடந்த 2019-2020ம் ஆண்டுகளில் நானும், கார்த்தி என்பவரும் செக்காலையில் தனி வீடு எடுத்து தங்கியிருந்தோம் என்றால் இல்லை. எனக்கு வங்கி கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. காரைக்குடி சுப்பிரமணியபுரத்தில் உள்ள பாரத ஸ்டேட் வங்கி கிளையில் கணக்கு உள்ளது. வங்கி கணக்கு என் எனக்கு தெரியவில்லை.

7. எனது வங்கி கணக்கை ஏன் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரர்களின் மீது நான் காவல்நிலையம் மற்றும் சமூக நலத்துறையில் எந்தவிதமான புகார் மனுக்களையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, கொடுத்துள்ளேன். நான் மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தவறாக நடக்க முயற்சித்தார் என்று எந்த விதமான விவரத்தையும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கை மிகைப்படுத்தி எனது நிருபண வாக்குமூலத்தில் பொய்யாக 2ம் எதிர்மனுதாரர் என்னிடம் தவறாக நடக்க முயன்றார் என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

8. எனது தந்தை என்ன வேலை செய்கிறார் என்றால் மெக்கானிக் வேலை செய்கிறார். எனக்கு உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் எனக்கு ஒரு அண்ணன் தான். எனது கணவர் எனக்கு உறவினர். எனது அப்பாவிற்கு நான் சொன்னதுபோல் 40 பவுன் நகையை போடுவதற்கு வசதி இல்லையென்றால் சரியல்ல, எனது அப்பா கடந்த இரண்டு ஆண்டுகள் முன்புவரை மஸ்கட் நாட்டில் வேலை செய்தார் தற்போது தான் மெக்கானிக்காக உள்ளார். எனது தந்தை மஸ்கட் நாட்டில் வேலை செய்யவில்லை என்றும், அவர் இந்தியாவில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

9. எனது கணவரான 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் எந்தவிதமான வசதி இல்லை என்பதால் இருகுடும்பத்தார்களும் உறவினர்கள் என்ற அடிப்படையில் சுமார் பத்து பவுன் நகையை போட்டுத்தான் திருமணம் நடைப்பெற்றது என்றும், மேற்படி பத்து பவுன் நகையும் என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு 1ம் எதிர்மனுதாரர் எத்தனை பவுன் தாலிச்செயின் போட்டார் என்றால் 5 பவுன் தாலிச்செயின் போட்டார். 1ம் எதிர்மனுதாரருக்கு குடிப்பழக்கம் கிடையாது என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10. எனது வீட்டுக்காரர் என் மீது பிரியமாக இருந்ததால் தான் அவர் நெஞ்சில் எனது பெயரை பச்சைக் குத்தியுள்ளார் என்றால் சரியல்ல, கல்யாணத்திற்கு முன்பு பச்சைக் குத்தியுள்ளார். கல்யாணத்திற்கு முன்பே பச்சைக் குத்தவில்லை என்றும், இந்த வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால சரியல்ல. நான் 1ம் எதிர்மனுதாரரிடம் நீங்கள் வெளிநாட்டில் உள்ளீர்கள் உங்களை எப்படி நம்புவது என சொன்னதால் என்னை கூட்டிச்சென்று 1ம் எதிர்மனுதாரர் அவர் நெஞ்சில் பச்சைக் குத்தினார் என்றால் இல்லை.

11. நான் திருமணம் முடிந்தபின்னர் 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களுடன் எவ்வளவு காலம் வசித்தேன் என்றால் 3மாத காலம் வசித்தேன். அதன்பின்னர் எனக்கு முதல் குழந்தை பிறந்தவுடன் இரண்டு வீடுகள் தள்ளி தனியாக அவர்கள் வசிக்க ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள் எந்தவிதமான ஏற்பாடையும் எனக்கு தனியாக வசிக்க செய்துகொடுக்கவில்லை என்றும், நானாக தான் தனியாக வசித்தேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் பணம் அனுப்பி அதன்பேரில் 2 மற்றும் 3ம் மனுதாரர்கள் வீட்டை ஏற்பாடு செய்து கொடுத்தார்கள்.

12. நான் எனது விருப்பப்படி வாழ்வதற்காக தனியாக வசித்தேன் என்றும், வழக்கிற்காக பொய்யாக 2,3 எதிர்மனுதாரர்கள் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு பெண் குழந்தை பிறந்ததால் தனியாக வைத்தார். நான் டிஎன்.63 பி.வி.3996 என்ற இருசக்கர வாகனம் வைத்துள்ளேன் என்றும், மேற்படி வாகனத்தை யார் எனக்கு வாங்கி கொடுத்தது என்றால் எனது அண்ணன் வாங்கிக்கொடுத்தார். மேற்படி வாகனத்தை கார்த்தி என்பவர் தான் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல.

13. எனது நிருபண வாக்குமூலத்தில் நகை மற்றும் பொருட்களை பற்றி பாரா5ல் சொல்லியுள்ள விவரங்கள் பொய் என்றால் சரியல்ல. உண்மைதான். 1ம் எதிர்மனுதாரர் போர் மேனாக வேலை பார்த்தார் என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு வேலைபார்ப்பதாக தான் சொல்லி பெண் பார்த்தார்கள். எனது நிருபண வாக்குமூலத்தில் எனது தாயார் எனது மூத்த குழந்தை பிறந்ததற்கு 4 பவுன் நகை போட்டேன் என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

14. 1ம் எதிர்மனுதாரர் பெண்பித்தன் என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் அவர் திருமணத்திற்கு முன்பு பக்கத்து வீட்டு பெண்ணுடன் தொடர்பில் இருந்துள்ளார். அவர் பெயர் லதா. அவரது தகப்பனார் பெயர் தெரியாது. மேற்படி லதாவிற்கு எனது திருமணத்திற்கு முன்பு திருமணம் ஆகிவள்ளதா என்றால் திருமணம் ஆகி இரண்டு குழந்தைகள் இருந்துள்ளது. நான் லதா என்பவரை பற்றி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1,2 எதிர்மனுதாரர்கள் என்னை எந்த காலத்திலும் கொடுமை செய்யவில்லை என்றால் கொடுமை செய்தார்கள், அதனால்தான் புகார் கொடுத்துள்ளேன்.

15. நான் கொடுத்த புகாரில் உண்மை இல்லை என்பதால் தான் மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் எனது குழந்தைகளுக்கு நியாயமான செலவுகள் அனைத்தையும் செலவு செய்ய தயாராக உள்ளார் என்றும், ஆனால் ஒழுக்கக்கேடாக நடந்த எனக்கு எந்தவிதமான பணத்தையும் செலுத்த தயாராக இல்லை என்றால் நான் ஒழுக்கக்கேடாக இல்லை. நான் 3ம் நபருடன் சட்டவிரோதமாக குடும்பம் நடத்துவதால் என் மீது விவாகாரத்து வழக்கை 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் 3ம் நபருடன் குடும்பம் நடத்துவது என்று சொல்வது உண்மை இல்லை. விவாகரத்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

16. எனது குழந்தைகள் தற்போது எந்த பள்ளியில் படித்துவருகிறார்கள் என்றால் இன்டெல் வித்யாலாயா பள்ளியில் படித்துவருகிறாார்கள். 2ம் மனுதாரர் எட்டாம் வகுப்பு படித்துவருகிறார். 3ம் மனுதாரர் நான்காம் வகுப்பு படித்துவருகிறார். நான் பி.காம் படித்துள்ளேன். நான் தேவகோட்டையில் தனியார் நிறுவனத்தில் வேலைபார்த்துவருகிறேன் என்றால் இல்லை. எனது நிருபண வாக்குமூலத்தில் பாரா15ல் சொல்லியுள்ள அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல, உண்மைதான். நான் திருமணம் முடிந்து 3 மாதங்களுக்கு பின்பு என்னை தனியாக விட்டப்பின்பு எனக்கும், 2ம் எதிர்மனுதாரருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல, எனக்கு ஆண் குழந்தை பிறந்த பின்னர் 2ம் எதிர்மனுதாரருடன் வசித்தேன்.

17. என்னை தேவகோட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழச் சொன்னார்கள் என்றும், நான் நீதிமன்றத்தில் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் நிருபண வாக்குமூலத்தில் கடந்த 30.12.2021 மற்றும் 04.01.2022ம் தேதி இரண்டு முறை 1ம் எதிர் மனுதாரரின் வீட்டிற்கு சென்றதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, உண்மைதான். நான் 42 1/4 பவுன் நகை பீரோவில் இருந்து காணாமல் போனதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, உண்மைதான்.

18. நான் பல்வேறு தவறுகள் செய்த பின்னரும் 1ம் எதிர்மனுதாரர் 2021ம் வருடம் இந்தியாவிற்கு வந்தபோது குழந்தைகளுக்காக என் தவறுகளை எல்லாம் மன்னித்துவிடுவதாக சொன்னார் என்றும், அப்போது நான் கார்த்தி இல்லாத வாழ்க்கை எனக்கு தேவையில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் என் உறவினர்களை துர்போதனைகளை கேட்டுக்கொண்டு பொய்யாக எதிர்மனுதாரர்களை அவமானப்படுத்தி மன உலைச்சலுக்கு ஆளாக வேண்டுமென்று இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

19. 1ம் எதிர்மனுதாரர் நான் எந்த காலத்திலும் கார்த்தியை விட்டு பிரிந்து அவருடன் சேர்நது வாழ தயாராக இல்லை என்ற காரணத்தினால் விவாகரத்து கோரி என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு என்னுடைய நடவடிக்கையால் மனதாலும், சமூகத்தின் அவருக்கு ஏற்பட்ட அவமானத்தாலும் எனக்கு ஜீவனாம்சம் கொடுக்க அவர் தயாராக இல்லை என்றால் சரியல்ல, அவ்வாறு சொல்லமுடியாது. எனக்கு நடந்த திருமணப்

பத்திரிக்கையில் 1ம் எதிர்மனுதாரரின் தொழில் விவரம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் அவரது படிப்பு மட்டும்தான் போடப்பட்டுள்ளது.

20. நானும், 2ம் மனுதார் மற்றும் கார்த்தி மற்றும் அவர் நண்பர்களுடன் அடிக்கடி வெளியே திருமண நிகழ்வு, சினிமாவிற்கு செல்வது வழக்கம் என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சங்கதிகளை கூறி தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் திருமணத்திற்கு பின்னர் 1ம் எதிர்மனுதாரருக்கு நல்ல மனைவியாக வாழவில்லை என்றும், 2ம் எதிர்மனுதாரருக்கு நல்ல மருமகளாக வாழவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் 2 மற்றும் 3 ம் மனுதாரர்களை பார்ப்பதற்கு அனுமதிப்பேனா என்றால் அனுமதிப்பேன். எப்பொழுது 1ம் எதிர்மனுதாரர் வந்தாலும் 2 மற்றும் 3ம் மனுதாரரை பார்க்க அனுமதிப்பேன்.

21. 1ம் எதிர்மனுதாரர் இம்மனு நிலுவையிலிருக்கும்போது பகுதி ஜீவனாம்சம் தொகை 2 மற்றும் 3ம் மனுதாரர்களுக்கு செலுத்தியுள்ளார் என்றால் யாருக்கும் கொடுத்தார்கள் என்று தெரியாது, ஆனால் பணம் கொடுத்தார். நான் 1ம் எதிர்மனுதாரரிடம் ஜீவனாம்சம் பெற தகுதியில்லை என்பதால் தான் எனக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் அவர் மனைவிதான், எனக்கு தகுதியில்லாமல் போகாது.

**<u>மறுவிசாரணை:</u> இல்லை.**

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.